# <u>தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்</u>

( சுருக்கம் )

படிகள் — பழைய ஊதிய விகிதத்தில் அகவிலைப்படி 1-1-2012 முதற்கொண்டு உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வீதம் - ஆணைகள் - வெளியிடப்படுகிறது.

---

( செயலகக் கிளை )

<u>(நிலை) முழுவாரியம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் செயல்முறை ஆணை எண்.30, நாள் 6-6-2012.</u>

வைகாசி மாதம் - 24-ம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2043.

<u>படிக்கப்பட்டது:</u>

1) (நிலையான) வாரிய செயல்முறை ஆணை (முழுவாரியம்) எண்.32, (செயலக் கிளை) நாள் 13-10-2009.
2) (நிலையான) வாரிய செயல்முறை ஆணை தலைவர் எண்.223 (செ.கி) நாள் 21-11-2009.
3) (நிலையான) வாரிய செயல்முறை ஆணை தலைவர் எண்.224 (செ.கி) நாள் 21-11-2009.
4) (நிலை) முழுவாரியம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் செயல்முறை ஆணை எண்.23, நாள் 27-4-2012..
5) (நிலையான) செயல்முறை ஆணை (முழுவாரியம்) எண்.1, நாள் 3-1-2012.
6) அரசு ஆணை எண்.145 நிதி (படிகள்)த் துறை, நாள் 30-4-2012.

-------

<u>செயல்முறைகள்:-</u>

பார்வை 1-ல் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின்வாரிய ஆணையில், வாரியத்தின் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு 01-07-2009 முதற்கொண்டு அகவிலைப்படியினை அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலை ஊதியத்தில் 73 சதவீதம் என்ற வீதத்தில் வழங்கிட ஆணையிடப்பட்டது.

<u>2.</u> பார்வை 4-ல் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின்வாரிய ஆணையில் 1-12-2007 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட ஊதிய மாற்றத்தின் அடிப்படையில் புதிய ஊதிய விகிதத்தில் ஊதியம் மற்றும் படிகள் பெற்று வரும் வாரியத்தின் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு 1-1-2012 முதற்கொண்டு திருத்தப்பட்ட அகவிலைப்படியை அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் 58 சதவீதத்திலிருந்து 65 சதவீதமாக உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டது.

3. பார்வை 5-ல் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக ஆணையில், பழைய ஊதிய விகிதத்திலேயே தொடர்ந்து ஊதியம் மற்றும் படிகள் பெற்று வரும் பணியாளர்களுக்கு, 01-07-2011 முதல் அகவிலைப்படியை 115 சதவீதத்திலிருந்து 127 சதவீதமாக உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டது.

4) பார்வை 6-ல் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு ஆணையில் பழைய ஊதிய விகிதத்திலேயே தொடர்ந்து ஊதியம் மற்றும் படிகள் பெற்று வரும் மாநில அரசு பணியாளர்களுக்கு 1-1-2012 முதல் அகவிலைப்படியை 127 சதவீதத்திலிருந்து 139 சதவீதமாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

5. மேற்காணும் அரசாணையைப் பின்பற்றி, பழைய ஊதிய விகிதத்திலேயே தொடர்ந்து ஊதியம் மற்றும் படிகள் பெற்று வரும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக ஊழியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு அகவிலைப்படியைக் கீழ்கண்டவாறு உயர்த்தி வழங்கிட ஆணையிடுகிறது:-

| எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| 01-01-2012 முதல் | அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலை ஊதியத்தில் 139 சதவீதம் |

6. மேற்காணும் உயர்த்தப்பட்ட வீதத்திலான அகவிலைப்படியானது, பழைய ஊதிய விகிதத்திலேயே தொடர்ந்து ஊதியம் மற்றும் படிகள் பெற்று வரும் வாரியத்தின் தொழிலாளர்கள், அலுவலர்கள் மற்றும் ஊதிய ஏற்றமுறையுடன் கூடிய ஊதிய விகிதத்தில் ஊதியம் பெறும் பகுதி நேரப் பணியாளர்களுக்கு **(absorbed Part Time Sweepers / Scavengers in the time scale of pay)** 1-1-2012 முதற்கொண்டு கணக்கிடப்பட்டு ரொக்கமாக வழங்கப்படும்.

7. அனுமதிக்கத்தக்க உயர்த்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிடுகையில், ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை, 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின், அதனை அடுத்த ஒரு ரூபாயாகக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அதனை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

8. இந்த ஆணையைப் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையை உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும்..

( வாரிய ஆணையின்படி )

அ. சு. பசுபதி
செயலாளர்.

பெறுநர்

அனைத்துத் தலைமைப் பொறியாளர்கள்.

தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் / (பொது) / (வருவாய்)

அனைத்து மேற்பார்வை பொறியாளர்கள்.
அனைத்து துணைச் செயலாளர்கள், செயலகக் கிளை,
தலைமை உட்தணிக்கை அலுவலர்.
தன்னகத் தணிக்கை அலுவலர் (மாநில கணக்கு துறைத் தலைவர்)
அனைத்துக் கிளைகள் (தலைமையிடம்).

<u>நகல்</u>

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் பார்வைக்கு,
மேலாண்மை இயக்குநர் / தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம்
அனைத்து இயக்குநர்கள் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம்
செயலாளர் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
காவல்துறை தலைவர் (விழிப்புப்பணி) / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
சட்ட ஆலோசர் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
மேற்பார்வை பொறியாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அலுவலகம்.
துணைத் தலைமைப் பொறியாளர் / நிர்வாகக் கிளை,
முதுநிலை பணித்தொகுதி அலுவலர்கள் / நிர்வாகக் கிளை,
தொழில் உறவு ஆலோசகர்.
இயக்குநர் / தமிழ்நாடு மின்வாரிய பதிப்பகம்.
இயக்குநர் / கனிணி மையம்.
தலைமை மருத்துவ அலுவலர், தலைமையிட மருந்தகம்.
தொழில் உறவு அலுவலர்.
அனைத்து அலுவலர்கள், பிரிவுகள் / செயலகக் கிளை,
தலைமை மக்கள் தொடர்பு அலுவலர் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
உறைவிட மேலாளர் / புதுதில்லி,
உதவி பணித் தொகுதி அலுவலர் / தமிழ் வளர்ச்சி / த.நா.மி.வா. இதழில் பிரசுரிப்பதற்காக.
அ-2, அ-8, அ-9, அ-10, அ-11, அ-12, அ-13 மற்றும் அ-19 பிரிவுகள் / செயலகக் கிளை.
நிர்வாக இயக்குநர் / மின்நிதி முதலீட்டுக் கழகம்,
டி.என்..எப்.சி – டவர், எண். 490/3-4, அண்ணா சாலை, நந்தனம் சென்னை-35.
தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்.,
ஈ.வி.கே. சம்பத் மாளிகை, 5வது மாடி, கல்லூரி சாலை, சென்னை–6.
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 19,**A**, ருக்மணிலட்சுமிபதி சாலை (மார்சல்ஸ் ரோடு) எழும்பூர், சென்னை-8..
தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர் சம்மேளனம்.

தமிழ்நாடு மின்வாரிய கணக்காயர் மற்றும் களத் தொழிலாளர் சங்கம்.
தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்.
தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு
மின்சாரப் பிரிவு அண்ணா தொழிற்சங்கம்.
தமிழ்நாடு மின்வாரிய ஜனதா தொழிலாளர் சங்கம்.
தமிழ்நாடு தேசிய மின் தொழிலாளர் சம்மேளனம் (இரண்டு பிரிவுகள்).
தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர் சங்கம்.
தமிழ்நாடு மின் ஊழியர் காங்கிரஸ்
தமிழ்நாடு மின்வாரிய தொழிலாளர் ஐக்கிய சங்கம்.
தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர் கழகம்.
தமிழ்நாடு மின்வாரிய நிதி மற்றும் கணக்கு அலுவலர் சங்கம்.
பாரதீய மின் தொழிலாளர் சம்மேளனம்.
தமிழ்நாடு மின் வாரிய அட்டை பட்டியல் பணியாளர் சங்கம்.
தமிழ்நாடு மின் வாரிய டாக்டர் அம்பேத்கார் எம்ப்ளாயீஸ் யூனியன்.

// உண்மை நகல் // உத்தரவின்படி அனுப்பப்படுகிறது //

பொறியாளர் சங்கம்

பிரிவு அலுவலர்.

பொறியாளர் சங்கம்